# உண்மையான உதவி.

## உடனடியாக இப்போதே.



# 100 டாலர்கள் மின் சேமிப்பு ஊக்குவிப்புத் தொகை எவ்வாறு விண்ணப்பிப்பது

மிகவும் தேவைப்படும் விக்டோரியவாசிகளின் உண்மையான வாழ்வாதாரச் செலவினங்களுக்கான உதவியை வழங்குதல்.

தேவைப்படும் விக்டோரியவாசிகளின் வாழ்வாதாரச் செலவினங்களைச் சரி செய்வதற்கும், எரிசக்திக் கட்டணங்களைக் குறைப்பதற்கும் விக்டோரிய அரசு புதிய 100 டாலர்கள் மின் சேமிப்பு ஊக்குவிப்புத் தொகையுடன் உண்மையான உதவியை வழங்குகிறது.

25 ஆகஸ்ட் 2025 முதல், தகுதியான சலுகை அட்டை வைத்திருப்பவர்கள் விக்டோரிய எரிசக்தி ஒப்பீடு (Victorian Energy Compare) இணையதளத்துக்குச் சென்று ஊக்குவிப்புத் தொகைக்கு விண்ணப்பிக்கலாம், அதே நேரத்தில் அவர்கள் மிகச் சிறந்த எரிசக்தி சலுகையில் இருக்கிறார்களா என்பதையும் சரிபார்க்கலாம்.

விக்டோரிய எரிசக்தி ஒப்பீடு (Victorian Energy Compare) என்பது மின்சாரம், எரிவாயு மற்றும் சூரிய சக்தி சலுகைகளை ஒப்பிடுவதை எளிதாக்கும் இலவச மற்றும் சுயேச்சையான, அரசாங்கத்தால் நடத்தப்படும் இணையதளமாகும். எரிசக்தித் திட்டங்களைத் தொடர்ந்து சரிபார்த்து மற்றும் அவற்றில் மாறுதல் செய்ய இணையதளத்தைப் பயன்படுத்துவதன் மூலம், விக்டோரியவாசிகள் தங்கள் எரிசக்திச் செலவுகளில் கணிசமான அளவு சேமிக்க முடியும்.

100 டாலர்கள் மின் சேமிப்பு ஊக்குவிப்புத் தொகைக்குத் தகுதி பெற நீங்கள் வேறு எரிசக்தித் திட்டத்திற்கு மாற வேண்டியதில்லை. கிடைக்கக்கூடிய திட்டங்களை ஒப்பிட்டுப் பார்க்க இணையதளத்தைப் பயன்படுத்தவும் - இது விரைவானது, எளிதானது மற்றும் சிறந்த ஒப்பந்தத்தைக் கண்டறிய உங்களுக்கு உதவும்.

### 100 டாலர்கள் மின் சேமிப்பு ஊக்குவிப்புத் தொகை

100 டாலர்கள் மின் சேமிப்பு ஊக்குவிப்புத் தொகை என்பது தகுதியுள்ள குடும்பங்கள் குளிர்கால எரிசக்திக் கட்டணங்களை நிர்வகிக்கவும். வாழ்வாதாரச் செலவினங்களின் அழுத்தங்களைக் குறைக்கவும் உதவிடும் வகையில் வடிவமைக்கப்பட்ட, ஒரே முறையில் செலுத்தும் தொகையாகும்.

விக்டோரிய எரிசக்தி ஒப்பீடு (Victorian Energy Compare) இணையதளத்தைப் பயன்படுத்தி விண்ணப்பிக்க, நீங்கள் புதிய சேமிப்புகளைக் கண்டறியலாம் - அத்துடன் நீங்கள் அதைச் செய்தால் 100 டாலர்கள் ஊக்குவிப்புத் தொகையைப் பெறலாம்.

### தகுதி

தகுதி பெறுவதற்குக் குடும்பத்தினர் செய்ய வேண்டியவை:

- சமீபத்திய குடியிருப்பு மின்சாரக் கட்டணச்சீட்டு வைத்திருக்க வேண்டும்
- பின்வரும் சலுகை அட்டைகளில் ஒன்றை வைத்திருக்க வேண்டும்:
  - சுகாதாரப் பராமரிப்பு (Health Care) அட்டை
  - ஓய்வூதியதாரர் சலுகை அட்டை
  - முன்னாள் இராணுவத்தினர் விவகாரங்கள் (Veteran's Affairs) ஓய்வூதியச் சலுகை அட்டை
  - முன்னாள் இராணுவத்தினர் விவகாரங்கள் தங்க அட்டை

ஒரு குடும்பத்துக்கு ஒரு பண வழங்கீடு மட்டுமே கிடைக்கும்.

### எவ்வாறு விண்ணப்பிப்பது

விண்ணப்பிக்க, விக்டோரிய எரிசக்தி ஒப்பீடு (Victorian Energy Compare) இணையதளத்துக்குச் செல்லவும் (compare.energy.vic.gov.au) அல்லது தொலைபேசி மூலமாகவோ (1800 000 832) அல்லது பங்கேற்கும் அக்கம்பக்கத்துக் குடியிருப்பு (Neighbourhood Hous) வழியாக நேரிலோ விண்ணப்பிக்கவும்.

VICTORIAN ENERGY COMPARE

VICTORIA State Government

# **உண்மையான உதவி**. உடனடியாக இப்போதே.

**விக்டோரிய எரிசக்தி ஒப்பீடு (Victorian Energy Compare) உங்களுக்காகச் செய்யக்கூடியவை:**

- கிடைக்கக்கூடிய சலுகைகளை இது உங்கள் தற்போதைய திட்டத்துடன் ஒப்பிடும், இதன் மூலம் அவை அதிகமாகவோ அல்லது குறைவாகவோ உள்ளதா என்பதை நீங்கள் பார்க்க முடியும்.
- இது சந்தையிலுள்ள ஒவ்வொரு விக்டோரிய எரிசக்திச் சில்லறை விற்பனையாளரிடமிருந்தும் ஒவ்வொரு விலைச்சலுகையையும் ஆராய்கிறது.
- இது உங்களுக்குப் பசுமை எரிசக்திச் சலுகைகள் மற்றும் சூரிய மின்சக்திக் கட்டணங்களைக் காட்டுகிறது.
- மிகச்சிறந்த தகவல்களை வழங்குவதற்கு, இது உங்களது வீடு அல்லது வணிகத்திற்குத் தரவுகளைப் பயன்படுத்துகிறது.

**1** **உங்கள் சமீபத்திய மின்சார கட்டணச் சீட்டினைக் கண்டறியவும்.**

**2** compare.energy.vic.gov.au என்ற இணையதளத்துக்குச் செல்லவும்

**3** **உங்கள் தகவல்களைப் பதிவுசெய்து, மிகச்சிறந்த விலைச்சலுகைகளைக் கண்டறியவும்.**

## ஒப்பிட்டுப்பார்த்துச் சேமியுங்கள்

2024 -ஆம் ஆண்டு முழுவதும் விக்டோரிய எரிசக்தி ஒப்பீடு (Victorian Energy Compare) இணையதளத்தைப் பயன்படுத்தியவர்கள் மிகச்சிறந்த விலைச் சலுகைகளுக்கு மாறுவதன் மூலம் 240 டாலர்களுக்கும் அதிகமாக சேமிக்க முடிந்தது.

## குடியிருப்பு மற்றும் சிறு வணிகம்

விக்டோரிய எரிசக்தி ஒப்பீடு (Victorian Energy Compare) குடியிருப்பு மற்றும் சிறு வணிக எரிசக்தி நுகர்வோருக்குப் பொதுவாகக் கிடைக்கும் அனைத்து எரிசக்தி சலுகைகளையும் கொண்டுள்ளது.

## 17.5% தள்ளுபடி

சலுகை அட்டை வைத்திருப்பவர்கள் ஆண்டு முழுவதும் தங்கள் எரிசக்திக் கட்டணங்களிலும், (மே - அக்டோபர்) குளிர்கால எரிவாயுக் கட்டணங்களிலும் 17.5% தள்ளுபடியைப் பெறலாம்.Rum dieme factus, consit. It? quidium es et; nostebem la conu voludam diurei sendicerfin sendest iliciam,

விக்டோரிய அரசாங்கத்தின் எரிசக்தி இணையதளம், விக்டோரியாவின் பாதுகாப்பான மற்றும் நிலையான எரிசக்தி எதிர்காலத்தை மேம்படுத்த, தொழில்துறை மற்றும் சமூகத்துடன் நாங்கள் செய்து வரும் பணிகள் குறித்த தகவல்களை வழங்குகிறது.



## energy.vic.gov.au/households **என்ற இணையதளத்துக்குச் செல்லவும்.**

© விக்டோரிய மாநில எரிசக்தி, சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை நடவடிக்கைத் துறை ஆகஸ்ட் 2025

**ISBN** 978-1-76176-574-2 **(Print)**
**ISBN** 978-1-76176-575-9 **(pdf/online/MS word)**

ஆங்கிலம் அல்லாத பிற மொழிகளில் உதவிக்கு, 131 450 என்ற எண்ணில் மொழிபெயர்ப்பு மற்றும் மொழிபெயர்த்துரைப்புச் சேவைகளைத் (Translating and Interpreting Services) (TIS) தொடர்பு கொள்ளவும்.

**பொறுப்புத் துறப்பு**

இந்த வெளியீடு உங்களுக்கு உதவியாக இருக்கக்கூடும், ஆனால் விக்டோரிய மாநிலமும் அதன் ஊழியர்களும் இந்த வெளியீடு எந்த வகையான குறைபாடுகளும் இல்லாமல் இருப்பதாகவோ அல்லது உங்கள் குறிப்பிட்ட நோக்கங்களுக்கு முற்றிலும் பொருத்தமானதாக இருக்கும் என்றோ உத்தரவாதம் அளிக்கவில்லை, எனவே இந்த வெளியீட்டில் உள்ள எந்தவொரு தகவலையும் நீங்கள் நம்பியிருப்பதால் ஏற்படக்கூடிய எந்தவொரு தவறு, இழப்பு அல்லது பிற விளைவுகளுக்குமான அனைத்துப் பொறுப்பையும் மறுக்கிறது.

VICTORIA State Government

2052